"கர்த்தர் நகரைக் காக்காவிட்டால்
அதைக்காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்" தாபிதம்: 1876

# சத்தியவேத பாது காவலன்

தந்தி: "கதலிக் பிறஸ்" யாழ்ப்பாணம்
தொலைபேசி: 300
REGISTERED AT THE CEYLON G. P 'O. AS A NEWSPAPER.

சத்தியவேத
பாதுகாவலன்
வருடசந்தா
இலங்கை: வெளிநாடுகள்:
ரூபா 9-00
(தபாற்செலவு உட்பட)
தனிப்பிரதி சதம் 15

89-ம் புத். | யாழ்ப்பாணம், 1964-ம் ஆண்டு ஆனிமீ 20-ந்திகதி சனிக்கிழமை — பிரதிசதம் 15 | 24-ம் இல.

# சந்நியாச சபையினர்களுக்குப் பாப்பரசரின் விசேஷ வேண்டுகோள்

பரிசுத்த பாப்பரசர் அண்மையில் பல சந்நியாசசபை அதிபர்கள் கூடியிருந்த வைபவத்தில் உலக சந்நியாசிகள் யாவருக்கும் ஒரு வேண்டுகோள் விடுத்திருந்தார். அதில் அவர்கள் யாவரும் தாம்தாம் வசிக்கும் பிரதேசங்களில் உள்ள மேற்றிராணிமாருக்கு வேதப்பரப்புதல் வேலையில் முன்னிலும் கூடியவிதமாக உதவி புரியவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அவர்களுடைய சபையின் • விசேஷநோக்கமும், அப்பிரதேச மேற்றிராணிமாரின் விசேஷதேவைகளும் கூடிய அளவில் ஒன்றுபடுத்தப்பட்டு வேதப்பரப்புதல்வேலையில் உபயோகப்படவேண்டும் என்பதே பாப்பரசரின் முதல் வேண்டுகோள்.

இரண்டாவதாக அவர் வறுமையைக் கடைப்பிடித்தலின் அவசியத்தை வற்புறுத்திக்கூறினர். சந்நியாசிகள் முதன்முதல் தனித்தனிச் சீவியத்தில் வறுமையைத் தழுவி வாழவேண்டும். அத்துடன் நின்றுவிடாது, அவர்களது சபைகளினதும் ஸ்தாபனங்களினதும் வாழ்விலும் வறுமை தொனிக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். கட்டிட வேலைகளிலோ, வேறு அலங்கார வேலைகளிலோ அனுவசிய ஆடம்பரங்களைத் தவிர்க்கவேண்டுமென்றும், மக்களின் பெரும்பாலானேரின் வறுமைக்குத் தக்கதான மனேநிலையுடன் தொண்டாற்றுவதே தேவனுக்கு உவப்பானதுஎன்றும் எடுத்துக்காட்டினர் பரிசுத்தபாப்பரசர்.

# தம் பிள்ளைகளுக்குக் கீழ்ப்படியும் பெற்ருேர்

"இந்தக்காலம் தம்பிள்ளைகளுக்குக் கீழ்ப்படியும் பெற்ருேர்கள் உள்ள காலமாக இருப்பது துக்கத்துக்குரிய விஷயமாகும். பிள்ளைகள் கேட்பதற்கெல்லாம் பெற்ருேர் பணத்தை வீசிவிடுகின்றனர். கொடுக்காவிட்டால் பிள்ளைகள் நாண்டுகொண்டு நிற்கின்றனர். கடுமையாகப் பேசவோ நியாயத்தை எடுத்துக்காட்டவோ துணிவு உடையவர்களான பெற்ருேரின் தொகை குறைந்துவிட்டது. பிள்ளைகள் கேட்பதற்கெல்லாம் பணம்கொடுக்க முடியாத நிலையில் உள்ள தாய்மார் சிலர் மேல்நாடுகளில் உத்தியோகங்களைநாடி இதற்கு வேண்டிய பணத்தைப்பெற முயற்சிக்கின்றனர். இதனுல் குடும்பப்பரிபாலனம் சீர்கெட்டுப்போகின்றது. பிள்ளைகள் வறுமையை உணரவும், அதற்குத்தக சிக்கன வாழ்வுநடத்தி, முன்னேற்றமுயற்சிகளில் ஈடுபட்டு, வறுமையைப் போக்க வழிகாட்டவும் பொறுப்புள்ளவர் பெற்ருேரே. வறிய பெற்ருேரிலும் பிள்ளைகளுக்குப் பயப்படும் பெற்ருேர் பணக்காரப்பெற்ருேர்களே" — இவ்வாறு 3 பிள்ளைகளுக்குத் தந்தையும், ஆங்கில நாட்டு ஓர் உயர்தரக் கல்லூரி அதிபருமாகிய திரு. டொனலட் என்பவர் அண்மையில் கூறியுள்ளார்.

# 23-ம் அருளப்ப பாப்பரசரின் அமைதியான இறுதி நிமிஷங்கள்

"ஏன் என்னை அங்கலாய்ப்புடன் பார்க்கிறீர்? நான் ஓர் அபூர்வ ஆவியா?" — இவ்வாறு தனது தமையனுரை 23-ம் அருளப்ப பாப்பரசர் மரணத்துக்கு முந்திய நாளில் அன்புடன் வினவினுர். முதல்நாள் மூடு சன்னியில் அறிவின்றி இருந்த பாப்பரசர் அன்று தமது படுக்கையில் எழுந்திருந்து அன்புததும்ப இவ் வார்த்தைகளைக் கூறினுர். "நேற்று நான் இறந்திருந்ததுபோல் தோன்றியது. இன்றைக்கு உயிருடன் இருக்கின்றேன். ஆனுல், என்னுடைய பயணத்துக்கு யாவும் ஒழுங்காகிவிட்டது." இவ் வார்த்தைகளைக் கேட்ட சகோதரன் விம்மிவிம்மி அழத்தொடங்கினுர். அப்போது பாப்பரசர்: "நீர் ஏன் அழவேண்டும். இஸ்பிரீத்து சாந்துவின் திருநாள் நல்லதினமல்லவா? நான் விரைவில் மோட்சத்தில் இருப்பேன்" என்று

(தொடர்ச்சி 2-ம்பக்கம்)

## 6-வது சின்னப்பரின் புதியசெயல்கள்

நமதுபரிசுத்த தந்தை 6-வது சின்னப்பர், பாப்பரசரானதன் பின்பு ஆச்சரியமிக்க பல கருமங்களைச் செய்துவருகிருர். முந்திய காலங்களிலே பாப்புமார் செய்யத்துணியாத பல விஷயங்களையும் இவர் இக்குறுகியகால எல்லையுட் செய்துவிட்டார். 23-ம் அருளப்பபாப்பரசரின் மனப்பான்மையை நன்கு விளங்கிய 6-வது சின்னப்பர், அவர் உயிருடன் இருக்கில் என்னத்தைச் செய்திருப்பாரோ அவற்றையெல்லாம் தாமே செய்துவருவதைக் காண்கிருேம்.

இவ்வாரத்தில் பலம்குறைந்த பலவறிய குழந்தைகளுக்குத் தாமே புதுநன்மை அளித்து உறுதிப்பூசுதல் கொடுத்ததும், சற்பிரசாதத் திருநாளன்று தமது கைகளிலேயே கதிர்ப்பாத்திரத்தைக் கையில் ஏந்தி உரோமாபுரி வீதிகள்வழியாக வந்ததுவும் இதற்கு நற்சான்றுகளாகும்.

## சுதேச கலாசார அடிப்படையில் போதியுங்கள்

"வேதசத்தியங்களை எங்கெங்கே போதிக்க நேரிடுகின்றதோ அங்கங்கு எல்லாம் சுதேச கலாசார அடிப்படையில் போதியுங்கள். நீங்கள் போகும் நாடுகளில் உள்ள உகந்த கலாசாரங்கள் வளர நம்மால் ஆனவற்றைச் செய்யவேண்டும். தேவவழிபாட்டுக்கு முட்டுக்கட்டையாக இருப்பனவற்றைவிட்டு ஏனைய முறைகளைக் கைக்கொள்ளுங்கள்" — இவ்வாறு பரிசுத்தபிதா தம்மைத் தரிசிக்கச் சென்ற குருமார் அடங்கிய ஒரு கூட்டத்தினருக்குப் புத்தி புகட்டினுர்.

# ஸ்ரீ நேருவுக்குக் கர்தினல் கிருசியாஸ் இறுதி அஞ்சலி

காலஞ்சென்ற ஸ்ரீநேரு அவர்கள் திடீர்மரணத்துக்கு முந்திய நாளன்றே கருதினல் கிருசியஸ் அவர்கள் இந்தியாவிலிருந்து ஐரோப்பா சென்றிருந்தார். பரிஸ் நகரத்திலிருந்து அவர் அனுப்பிய அனுதாபச் செய்தியில் காலஞ்சென்ற நேரு அவர்கள் ஒருபெரும் மகான் என்றும், சலிப்பின்றி இந்தியாவின் முன்னேற்றத்துக்குத் தம்மைஅர்ப்பணம்செய்த தியாகி என்றும், சாதி, மத, இன பேதமின்றி ஓயாது உழைத்த அரசியல் ஞானி என்றும், உலகசமாதானஉயர்தூதரென்றும், தனது சிறந்த ஒருநண்பன் என்றும்கூறி, பொதுவாக இந்திய கத்தோலிக்கரின் முன்னேற்றத்துக்காகவும் குறிப்பாக நடக்கப்போகும் சர்வதேச சற்பிரசாத மகாநாட்டுக்காகவும் அவர் அளிக்க முன்வந்த உற்சாகங்களுக்காக இந்திய கத்தோலிக்கரின் பெயரினுல் தமது மனமார்ந்த நன்றியை நேருவின் மகள் ஸ்ரீமதி இந்திரா காந்திக்கும், ராஷ்டிரபதி ஸ்ரீராதகிருஷ்ணன் அவர்களுக்கும் தெரிவித்திருக்கிருர்.

## யேசுசபை குருவானவருக்கு யப்பானியரின் நன்றி

யப்பான் தீவுகளில் பெரியதீவுகளில்ஒன்ருகிய ஹொன்டோதீவில் சிலநாட்களுக்குமுன் பல அரசாங்க உத்தியோகஸ்தர்களும், கத்தோலிக்கரும் பிறகிறிஸ்தவ சபையின் குருமாரும் ஒன்றுகூடி ஒருபெரும் விழாவைக் கொண்டாடினுர்கள். அவ்விழா கத்தோலிக்கசமய யேசுசபைக் குருவானவராகிய வணக்கத்துக்குரிய அல்மோடா சுவாமியார் மேல்நாட்டு வைத்திய அறிவுடன் அத்தீவில் கால்வைத்த 400 வருட நிறைவு தினவிழா. இக்குருவானவர் போர்த்துக்கால் தேயத்தவர். 1555-ம் ஆண்டு அத்தீவில் நிறுவப்பட்ட அரசாங்க பொதுவைத்திய சாலையின் பொறுப்பை ஏற்றுக் குருவானவர் திறமையாக நடத்திவந்ததை யப்பானிய மக்கள்நன்றி உணர்ச்சியுடன் நினைவு கூர்ந்தது சந்தோஷத்துக்குரிய சம்பவமே.

# கண்டி குருமாணவர் கல்லூரியில்

சென்றவாரம் திங்களன்றுகாலை கண்டிக் குருமாணவர் கல்லூரியில் பல பழையமாணவர், சிநேகிதர் முதலானேர்கூடி அக்கல்லூரியில் பலவருடங்களாக அதிபராகக் கடமையாற்றிய அதிவணக்கத்துக்குரிய சக்கட் சுவாமியார் அவர்களுக்குப் பிரியாவிடை கூறினின்றனர்.

அன்று பின்னேரம் புதியஅதிபர் வண. டல்ஸ்ரன் வோர்ப்ஸ் சுவாமியார் அவர்களுக்கு வரவேற்பு அளித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

### ஆனி மாதம் — 1964.

| | | | |
|---|---|---|---|
| 21 | ஞா. | பெங். கோ. பின் 5-ம் ஞாயிறு. | [ப] |
| 22 | திங். | அர்ச். பவுலீனப்பர் | [வெ] |
| 23 | செ. | அர்ச். எதில்துருத்தம்மாள் | [ஊ] |
| 24 | புத. | அர்ச். ஸ்நாபக அரு. (பிறப்பு) | [வெ] |
| 25 | வி. | அர்ச். வில்லியம் | [வெ] |
| 26 | வெ. | அர்ச். அருளப்பர் சின்னப்பர். | [சி] |
| 27 | ச. | பரி. சதாசகாயமாதா | [வெ] |


# சத்தியவேத பாதுகாவலன்

1964-ம் ஆண்டு ஆனி மாதம் 20-ந் திகதி


## எங்கள் நல்மேய்ப்பர்

ஓராண்டு காலத்துக்கு முன்னுல், அன்புத்தந்தை அருளப்ப பாப்புவை இழந்தோம்.

அவர்தம் சாதனைகளை எண்ணினேம். அவரின் இடத்தை நிரப்ப யாராலும் முடியாது என்று கருதினேம்.

அருளப்பரின் ஆக்கவேலைகள் குலைந்துவிடுமோஎன்று கலங்கினேம்.

பொதுச்சங்கத்தின் எதிர்காலம் எப்படியாகுமோஎன்று அஞ்சினேம்.

ஆயின், அப்படியெல்லாம் நடைபெறவில்லை. நல்லதேவன் அருளப்பரின் இடத்தில் சின்னப்பர்ஒருவரை நிறுத்தினுர்.

யார் இந்தச் சின்னப்பர்என ஆச்சரியத்துடன் நோக்கினேம். அவரில் அருளப்பரின் கொள்கைகளையே கண்டோம்.

உலக சமாதானம், கிறீஸ்துவ ஒற்றுமை, திருச்சபை நடவடிக்கைகளில் அவசிய மாற்றங்கள்.

அனைத்திலும் அருளப்ப பாப்புவின் செயலே மீண்டும் ஒலிக்கின்றது.

பதவியேற்ற சிலமாதங்கட்குள் வத்திக்கான் சங்கத்தை மீண்டும் கூட்டியமைகண்டு ஆறுதலடைந்தோம்.

அச்சங்க நடவடிக்கைகளின்போது அருளப்பரின் விவேகத்தோடு சின்னப்பர் செயலாற்றியமையை எண்ணி வியந்தோம்.

புனித பூமியாம் பலஸ்தீனுவுக்கு அவர்சென்ற சமாதான யாத்திரையை உலகமே பாராட்டியது.

ஆண்டாண்டு காலமாக வேற்றுமை காட்டிவந்த ஒதொடக்ஸ் சபைத் தலைவரைத் தேடிச்சென்று தரிசித்தமை சின்னப்பரின் மதிப்புக்குத் தனிமெருகு தந்தது.

காலத்தோடொட்டிய மாறுதல்களைத் துணிவுடன் திருச்சபையில் புகுத்திவருவது கத்தோலிக்கத்தின் மறுமலர்ச்சிக்கு உறுதுணையாகி வருகின்றது.

சின்னப்பதந்தை திருமுடிபுனைந்த ஓராண்டுநிறைவு நம்மை எதிர்நோக்குகின்றது.

எங்கள் அன்புத் தந்தையை அத்தினத்தில் மனமார வாழ்த்துவோம்.

அவர் தோள்களில் தாங்கும் பாரதூரப் பொறுப்புகளைத் திறமையுடன் அணுகும்படியாக இஸ்பிரீத்துசாந்துவின் உதவியை வேண்டுவோம்.

எங்கள் மேய்ப்பனின் பணிகளைச் சிரமேற் கொள்வதன்மூலம் திருச்சபையின் நல்ல எதிர்காலத்துக்கு வழிவகுப்போம்.

வாழ்க ஆருவது சின்னப்ப பெருந்தகை !
வளர்க அவர்தம் பணி !

**சிலுவையில் நாம் ஆராதிப்பது, வணங்குவது சிலுவையில் அறையுண்ட கிறிஸ்துவைத்தான். அவரைப் போதிப்பதில், அவரைப்பற்றி எடுத்துரைப்பதில் நாம்பெருமை கொள்வோம். இகழ்ச்சிச் சின்னமாக இருந்த சிலுவையை, புகழ்ச்சிச் சின்னமாக மாற்றினுர் யேசு. சிலுவை மீட்பின் சின்னம்—ஜெயமளிக்கும் சின்னம். நாம் மீட்கப் பட்டவர்கள். இம் மீட்பின் நற்செய்தியை உலகத்தார் அனைவரும் அறிய நம் அரிய 'பாதுகாவலனை'ப் பயன்படுத்துவோம்.**

# திருச்சபையும் தேவதாயாரும்

வழுவாவரம்பெற்று தூய ஆவியானவரின் வழிநடத்துதலினுல் தனது போதனைகளிலே தவருது நடந்துவரும் பரிசுத்தமாதாவாகிய திருச்சபை அன்றுதொட்டு இன்றுவரை தேவதாயாரின் பக்தியில் தனது ஞானமக்களை வழிநடத்திவருகின்றது. எல்லாக் காலங்களிலும் திருச்சபை தனது பக்திமுயற்சிகளிலும் ஆராதனைகளிலும் ஓர் உண்மையை வலியுறுத்திவந்திருக்கிறது. அதாவது படைத்தோனுக்கும்—படைக்கப்பட்ட வஸ்துவுக்கும் இடையில் பாரதூரமான பெரும் பேதம் உண்டென்பதைத் திருச்சபை உறுதிப்படுத்திவந்திருக்கிறது. தேவதாயார்மட்டிலும் அவ்வண்ணமே. கடவுளுக்கு—படைத்தோனுக்கு உரிய மேலான வணக்கத்தை, ஆராதனையைச் செலுத்திவந்திருக்கிறது; வருகின்றது. தேவதாயாருக்கு அவ்வித ஆராதனை செலுத்துவதில்லை. ஆனுலும் மற்றைய அர்ச்சியசிஷ்டர்களையும் தேவதூதர்களையும்விட தேவதாயாரைத் திருச்சபை மதித்துச் சங்கித்து வருகின்றது. யேசுநாதருக்குப் பின் அடுத்தபடியில் தேவதாயாருக்கு வணக்கமரியாதை செலுத்துகின்றது.

### கிறிஸ்துநாதரும் மரியாயும்

திருச்சபை தனது தெய்வீக குருவும் தாபகருமான யேசுவுக்கு முதலிடங்கொடுத்துத் திருச்சபையின் திருவருடத்தில் அவரது சீவியத்தின் முக்கிய அம்சங்களை, வாழ்நாளின் பிரதான சம்பவங்களை ஞாபகப்படுத்தத் திருநாட்களை ஏற்படுத்தியுள்ளது. இவ்வண்ணமே கிறிஸ்துநாதரின் திருத்தாயாரையும் மகிமைப்படுத்தவும் சங்கிக்கவும், பக்திபண்ணவும் அத்திருத்தாயாரின் வாழ்க்கையில் மகத்துவமான அம்சங்களை நாம் நினைவுகூர்ந்து அவளைக்கண்டுபாவிக்கவும், அவள் அடைந்த மகிமைக்காகச் சருவேசுரனைத் துதிக்கவும் ஏவிவருகின்றது. தேவதாயாரைக்குறித்துப் பல திருநாட்களை வருடமுழுவதிலும் திருச்சபை கொண்டாடிவருகின்றது. வைகாசிமாதமும் ஐப்பசிமாதமும் தேவதாயாருக்கென்று ஒப்புக்கொடுக்கப்பட்ட மாதங்களாகும். பலன்கள் நிறைந்த அவளது சிறியசெபம் எத்தனையோ சந்நியாச, கன்னியாஸ்திரி சபைகளினுல் தினமும் ஓதப்பட்டுவருகின்றது.

### எங்கும் முழங்கும் வாழ்த்தொலி

தினமும் மூன்று பொழுதுகளிலும் திருந்தாதிமணி ஒலிக்க, முழு உலகும் தேவதாயாரை வாழ்த்திச் செபிக்கின்றது. அவளுக்குத் தேவதூதன் கூறிய மங்கள வாழ்த்துக்கள் எங்கும் ஒலிக்கின்றன. தனிப்பட்ட முறையிலும் விசுவாசிகள் அபரிமிதமாக மரியாயைப் பக்திபண்ணுகின்றனர். பிரியதத்த மந்திரம் கத்தோலிக்க உலகிலே தொன்றுதொட்டு வழங்கிவரும் தனிப்பட்ட செபங்களிலே முக்கியத்துவம் பெற்றதாகும். அதற்குரிகான உலகப் பெருமையும் பிரபல்யமும் பெற்று விளங்கும் தனிச்செபம் வேறென்றுமில்லை. திருச்செபமாலை—பாப்பரசர் முதல் பாமரர்வரை ஒவ்வொருவர் கரங்களிலும் தவழுகின்றதே. அதன் மகிமையே மகிமை.

### எங்கள் இராக்கினி

நாம் கிறிஸ்துநாதரை எங்கள் அரசன் என்றும், இராசர்க்கு இராசன் என்றும், வாழ்த்துகிறேம். அவரது தாயாரையோ எங்கள் இராக்கினியாகக் கொண்டாடுகிறேம். "கிருபை தயாபத்துக்கு மாதாவாயிருக்கிற எங்கள் இராக்கினியே என்று அழைக்கிறேம். இன்னும் 'சம்மனசுகளுடைய இராக்கினியே', 'அர்ச்சியசிட்டர்களுடைய இராக்கினியே', 'அப்போஸ்தலருடைய இராக்கினியே', 'வேதசாட்சிகளுடைய இராக்கினியே', 'கன்னியருடைய இராக்கினியே" என்று பலவாறு மன்ருடுகிறேம்.

சருவேசுரனைத் தகப்பன் என்ற இடத்தில் வைத்து எங்கள் பிதாவே என்று அழைக்கும் நாம், தேவதாயாரை எங்கள் தாய் என்று கூப்பிடுகிறேம்; இரக்கத்தின் ஆண்டவரே என்று சருவேசுரனை அழைப்பதுபோல இரக்கத்தின் மாதாவே என்று மரியாயை மன்ருடுகிறேம்; புனித சுவிசேஷக அருளப்பர்: "பரமபிதாவிடம் பரிந்து பேசுகிறவராக யேசுநாதர் இருக்கிருர்"என்று கூறுகிருர். ஆனுல், திருச்சபையோ, "எங்களுக்காக வேண்டி மன்ருடுகிறதாயே உம்முடைய தயாபரமுள்ள திரு இரக்கக்கண்களை எங்கள் பேரிலே திருப்பியருளும்" என்று வேண்டிக்கொள்ளும்படி தூண்டுகிறது.

### எங்கள் சீவியமும் சந்தோஷமும்

யேசுநாதர் வழியும், உண்மையும், சீவியமுமாய் இருக்கிருர். தேவதாயாரும் எங்கள் சீவனும், எங்கள் மதுரமும், எங்கள் தஞ்சமுமாய் இருக்கிருள். தேவதாயார், மோட்சத்தின் வாசல், விடியற்கால நட்சத்திரம்—உதயதாரகை. வரப்பிரசாதங்களின் ஊற்ருய் இருப்பவர் யேசு. தேவ அன்னை வரப்பிரசாதத்தின் மாதாவாக விளங்குகின்ருள். பாவிகளின் இரட்சகர் அவர்; அவளோ பாவிகளின் அடைக்கலமாயிருக்கிருள். அவளே பலவீனர்களின் தைரியமாகவும், கிறிஸ்தவர்களின் சகாயமாகவும் திகழுகிருள்.

### தீர்க்கதரிசனம் நிறைவேறுகிறது

இவை எல்லாவற்றையும் நோக்கும் பொழுது தேவதாயார் எலிசபேத்தம்மாளை நோக்கி: "என்னை இக்காலமுதல் சகல சந்ததியினரும் பாக்கியவதி என்பார்கள்" என்றுகூறிய தீர்க்கதரிசனம் நிதர்சனமாகியுள்ளது என்பது புலனுகிறது. கபிரியேல் சம்மனசு அவருக்குத் தெரிவித்த மகத்தான செய்தியை எவருக்கும் சொல்லாது—சூசையப்பருக்கும்கூடத் தெரிவியாது இருந்த மரியாள் தூய ஆவியானவரால் தூண்டப்பட்டு எலிசபேத்தம்மாள் அவளைச் சருவேசுரனுடைய தாயார் என்று அழைத்தபோது அது மறைந்த இரகசியம் அல்ல என்பதை தெளிவாக உணர்ந்துகொண்டு — சருவேசுரனுக்கு நன்றித்துதியாக "இதோ இக்காலமுதல் என்னை ...... பாக்கியவதி என்பார்கள்"என்று வாய்விட்டுக்கூறுகிருள். "தனது அடிமையானவளைக் கிருபாகடாட்சத்துடன் நோக்கியருளினுர்" என்கிருள் மரியாள்.

திருச்சபை உலகமெங்கும் பரவும் பொழுது இத்தீர்க்கதரிசனத்தின் உண்மையை நாம் விளங்கிக்கொள்ளாமல் இருக்கமுடியாது. கோடிக்கணக்கான இதயங்கள் — "பெண்களுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவள் நீரே" என்று வானத்தை நோக்கிக் குரல் எழுப்பும் பொழுது அவள் கூறியபடியே பாக்கியவதி என்கிருர்கள்.

(My Yoke is Sweet) என்னும்நூலில் இருந்து எடுக்கப்பட்டது.

எஸ். எம். ஜே.

## 23-ம் அருளப்ப...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கூறினுர். அதன்பின் அவருக்கு அறிவுவரவில்லை. அவர் முன் இருந்த திருச்சிலுவையிலேயே கண்கள் பதிந்திருந்தன. திருச்சிலுவையைப் பார்த்தவண்ணம் பாக்கியமானமரணத்தை அடைந்தார் "சந்தோஷப் பாப்பரசர்" 23-ம் அருளப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு கதவு அடைக்கப்பட்டால்......!

"ஸில்வியா என்ன ஆனுள்"? என்பது தான் அவனது முதற் கேள்வி. "அவள் ஒரு கோடீஸ்வரரை மணஞ்செய்துவிட்டாள். பரமானந்தம் பொங்கும் வாழ்வு நடாத்துகிருள் மழலைச் செல்வங்களுடன்" என்று அவன் அறிய நேர்ந்தபோதோ, இனம்தெரியாத ஒரு வேதனை உள்ளத்தை உறுத்தியது. ஆனுல் ...அந்தக்கோடீஸ்வரர் யாரென அறிந்தபோதோ!......"அவள் உத்தமமானதைத் தெரிந்துகொண்டாள்" எனப் பெருமூச்சுவிடத்தான் முடிந்தது அவனுல்.

## கால் முரிந்தது கன்னிகைக்கு!....

ஒலிம்பியா தியேட்டர் நிரம்பிவழிந்தது. "ஹவுஸ் வுல்" என்ற பலகை வெளியே மாட்டப்பட்ட பின்னர் கூட அவ்விடத்தைவிட்டு விலகமனமின்றி நின்றுகொண்டிருந்தது ஜனக்குழாம். "ஷீலா தேவி" என்ற புனைபெயரால் அழைக்கப்பட்ட ஸில்வியாவின் நடனமென்ருல் கேட்கவா வேண்டும்? அவள் காலிற் சலங்கைகள் ஒன்ருேடு ஒன்று கொஞ்சி உறவாடும்போது எழும் மதுரநாதத்தை வெளியே நின்று கேட்டாலே போதும் என்பது ரசிகப் பெருமக்களிடையே பரந்துள்ள அபிப்பிராயம். அதுவும் இன்று அவள் ஆடப்போவது அர்ச். ஜெருட் அநாதை நிலையத் தரும நிதிக்காகவல்லவா? ஆகவே, அதிகமானேர் அவள் ஆட்டத்தைப் பெரிதும் வரவேற்றனர்.

மேளம் ஒலித்தது. நாதசுரம் இசைத்தது. தம்பூரா மீட்டப்பட்டது. குழல் ரீங்காரம் செய்தது. தாளம்நாணியது அவள் செம்பாதத்தின் அசைவைக்கண்டு. காலிற் சலங்கைகள் கலீர்கலீரெனத் துடியிடை வளைய நெளிந்து, குலுங்கி ஆடியது மயில். ஆடியவள் அசையாதுநின்று கரம்கூப்பி வணங்கினுள். கூட்டம் கூரை அதிரக் கைகொட்டியது பாராட்டிதழ்கள் வழங்கப்பட்டன. பதினறும் நிரம்பாத அப்பருவமங்கை மேடைவிட்டு இறங்கினுள் அன்ன நடையில். அப்போதுதான் எதிர்பாராத அச்சம்பவம் நிகழ்ந்தது. அந்தோ? படியில் சறுக்கிவிட்டாள் தற்செயலாக. தடாலென்றுகீழேவிழுந்தாள்; கணுக்கால் எலும்பு தெறித்துவிட்டது. மயங்கினுள் மடந்தை. "ஐயோ" என்ற குரலொலி.

ஓடோடி வந்தனர் நிர்வாகிகள். எல்லோரையும் முந்திக்கொண்டு துடித்தான் தவசீலன். யார் தெரியுமா? அவள் காதலன். அழகோவியத்தை அள்ளிக் காரில்போட்டுக்கொண்டு பறந்தான் வைத்தியசாலையை நோக்கி. பெயர்பெற்ற டாக்டர்களை, அள்ளியிறைக்கப்பட்ட பணம் துடிதுடித்து வேலைசெய்யவைத்தது. ஆனுல், தெய்வத்தின் செயலைத் தடுக்க வல்லார் யார்? கையை விரித்தனர் டாக்டர்கள். கண்களைத் திறந்தாள் ஸில்வியா! பேரிடி ஒன்று காத்திருந்தது அவளுக்காக. "ஒரு மாதசிகிச்சையின்பின் அவளை ஓர் அளவு குணபாட்டுடன் நடக்கவைக்கலாம். ஆனுல், இனிமேல் அவள் நடனமென்பதைக் கனவிலும் எண்ணமுடியாது" என்று சிகிச்சை நிபுணர் கூறியசெய்தியே அது. திகைத்துப்போனுன் தவசீலன். "நடனமே என் உயிர்நாடி; அஃதில்லாமல் நான் உயிர்வாழமுடியாது" என்று அவள் கூறிய இரண்டொரு வாரங்களிலா அக்கேடு சம்பவிக்கவேண்டும்?

## கை விட்டான் காதலன்!....

நிலைமையறிந்தாள் ஸில்வியா. ஆருத்துயரத்தினல் அவள் அரற்றிய அலறல் ஆஸ்பத்திரியையே ஒருமுறை கிடுகிடவைத்தது. நகையிழந்தது அவள் முகம். காணவருவோரிடம் ஒரே புலம்பல். "இனி வாழ்க்கை எதற்கு" என்பதே அவள் மனதின்போராட்டம். அவள் குடும்பத்துக்குப் பழக்கமான குரவர் பிராங்கோ அவளிடம் அடிக்கடி வருவார். அவரேதான் அவளை இத்தருமநிதிக்காக ஆடும்படி கேட்டவர். "கடவுளுக்காகவே, அவரின் அநாதைகளுக்காகவே ஆடினேன். கடவுள் என் காலையே முரித்துவிட்டாரே" என்று கதறினுள் ஸில்வியா. "ஸில்வியா! ஆத்திரப்படாதே. ஒரு கதவு அடைக்கப்பட்டால்! ....." என்று குரவர் முடிக்குமுன் "ஆம் மறுகதவு திறபடும்என்பதுபழமொழி. ஆனுல்,

(செல்வி ரோஜா சாமுவேல்)

இங்கே ஸில்வியா வாழ்க்கையையே, மனநிம்மதியையே இழந்துவிட்ட பிறகு எப்படி ஒரு கதவு திறபடக்கூடும் அவளுக்காக?" என்று கூறிய வண்ணம் உள்ளே நுழைந்தார்

> **கால், கை, தோள், தலை** என்பன உடலின் முக்கிய உறுப்புக்கள். ஆயின், இதயத்தில்தான் உடலின் உயிர்நாடியே தங்கியிருக்கிறதல்லவா? அஃதேபோல்தான் நம் கதையிலும் **இதயம்** என்னும் பகுதியிலேயே கதையின் உயிர்த்துடிப்பே அடங்கியுள்ளது.

துணை டாக்டர் ருத்ரா. ஸில்வியாவைப் பார்த்தார். "பார்த்தாயா? கடவுளை நம்புகிருயே! கடவுள் ஒருவர் இருந்திருந்தால் உனக்கு — அவருக்காக ஆடிய உனக்கு இந்த அவலநிலை ஏற்பட்டிருக்குமா எனத் தம் நாஸ்திகக் கொள்கையையே நிலைநாட்ட முயற்சித்தார் ருத்ரா அவர்கள். ஸில்வியாவும் ஓரளவு டாக்டரதுசொல்லையே ஆதரிப்பவள்போல் காணப்பட்டாள். "கடவுள் அனுப்புந் தீமைகளெல்லாம் நன்மைக்கே" என்று கூறியவாறு வெளியேறினுர் குரவர் பிராங்கோ.

தவசீலனது நிலையோ நிம்மதியற்றதாயிற்று. முதலில் நாளில் நான்கு தடவை வருவான். பின்னர் அவ்வித சந்திப்பு நான்கு நாட்களுக்கு ஒருமுறையாக மாறியது. இரண்டு வாரங்களுள் வெளியே நின்றபடி விசாரித்துப் போகுமளவுக்குக்கடின நெஞ்சினுகிவிட்டான். ஸில்வியா அவன்போக்கை உணர்ந்தாள். மனம் வேதனையுற்றது மெய்யே. ஆனுல், அவன் செய்வது சரியே என்றும் எண்ணினுள். ஆடலரசியை மனைவியாக்க எண்ணியவன் வீட்டிலே மட்டும் அடைந்துகிடக்கக்கூடிய நொண்டிப் பெண்ணைக் கட்டிக்கொண்டு அழமுயுமா? என்ன? நாளடைவில் அவளை முற்ருகவே கைவிட்டுவிட்டான் தவசீலன் என்ற அவள் காதலன்.

## தோள் கொடுத்தார் துணை டாக்டர்!

நாட்கள் ஓடிக்கொண்டிருந்தன. குரவர் பிராங்கோ இருதய அரசர் யேசுவின் படமொன்றுடன் வந்தார். அவள் தலைமாட்டில் மாட்டினுர்; 'தவறிப் [illegible] கொண்டி [illegible] முடைய கையில்" என்று அவர் உள்மனம் ஜெபித்தது. அடிக்கடி அவள் தன் கஷ்டங்களைப் பொறுக்கவேண்டியதையிட்டுப் புத்திமதிகளும் பொழிந்துவந்தார், அவள் அவற்றை ஓரளவு விரும்பாவிடினும் கேட்டுக்கொண்டேவந்தாள். "எல்லாம் நன்மைக்கே" என்ற சொல் அவள் காதுகளில் அடிக்கடி ரீங்காரம் செய்யும். இதற்கிடையில்தான் விரும்பியோ, விரும்பாதோ தனது தற்போதைய அவலநிலையிலிருந்து மீளமுடியாது என்பதை உணர்ந்துகொண்டாள். தலைமாட்டில் கண்விழித்துக் காத்திருந்த யேசுஅரசர் தமது வரப்பிரசாத மழையைப் பொழிய ஆரம்பித்தார். சில நாட்கள் சென்றன. இப்போதெல்லாம் ஸில்வியா ஒரு சாந்தமான செம்மறிப்புருவையாகிவிட்டாள். குரவரின் வரவைப் பெரிதும் விரும்பினுள். முணுமுணுப்பதை நிறுத்தினுள். இந்தஅதிசயமாற்றம் துணைடாக்டர் ருத்ராவை விழிப்படையச் செய்தது. ஞானஸ்நான வரத்தைப் பெருதவர் அவர். ஸில்வியாவிடம் சம்பாஷிப்பதில் அவருக்கு ஏனே எல்லையில்லா மகிழ்ச்சி. துணை டாக்டரும் அவள் வேதனை நேரங்களில் அருகில் இருந்து ஆறுதல் மொழிந்தார். இப்போது முற்றுமே மாறிவிட்ட ஸில்வியாவின் மொழிகள் அவர் மனதையும் மாறச்செய்தது. தனக்கு அவலநிலையை விட்ட இறைவனை நேசிக்கிருள் என உணர்ந்தார். இப்பொழுது ருத்ராவை மனந்திருப்பும் கருவியாக ஸில்வியாவைக் கடவுள் தெரிந்துகொண்டார். அவள் காட்டிய அன்பு, பொறுமை, அவளுடன் அவர்செய்த தர்க்கங்கள் யாவும் டாக்டர் ருத்ரா அவர்களை விரைவில் டாக்டர் பிரான்ஸிஸ் ஆக்கியது ஞான முழுக்கினல். அவர்களிடையே நிலவிய பரஸ்பர அன்பு அவர்களைப் புதிய காதலர்களாக உலகுக்குத் தெரிவித்தது. தவசீலன் காதுகளிலும் செய்திகள் விழுந்தன. மனமுடைந்தேபோனுன். விரைவில் அவன் தன் நாடுவிட்டுப் பலமைல்களுக்கப்பால் சென்றுவிட்டான். உத்தியோக உயர்வு பெறும் நோக்குடன்.

## தலை சுற்றியது தவசீலனுக்கு!....

சிலவருடங்கள் வேகமாகப் பறந்து சென்றன. தவசீலன் தன்நாடு திரும்பினுன். மேலைத்தேச பெண்ணெருத்தியின் மோகத்தில் மூழ்கி இரண்டொருவருடங்கள் மின்னெனப் பறந்த இன்பவாழ்வை அனுபவித்தான். விவாகரத்துத்தான் மேலைத்தேச நாகரீகமாயிற்றே. சிலதினங்களுள் அவனைப்பற்றிய அக்கறையேயில்லாதுபோய்விட்டது அவளுக்கு. மனமொடிந்து நாடுதிரும்பியிருந்தான். மோட்டார் வாகனத்தை ஓட்டிக்கொண்டே நகர்ப் பூங்காவைச் சுற்றியவன் குரவர் பிராங்கோவைச் சந்தித்தான் வழியிலே. 'தந்தையே!' என்று அழைத்தவண்ணம் வாகனத்தை நிறுத்திய தவசீலன் குரவரையும் பக்கத்திலேறி அமரவைத்தான். குரவர் அமைதியாய்த் தவசீலனை நோக்கினுர். தவசீலன் வாயிலிருந்து பிறந்த முதற்கேள்வி அது. "தந்தையே! ஸில்வியா என்னஆனுள்" என்று வினவினுன். அவளா! அவள்தான் ஒரு கோடீஸ்வரரை மணந்துகொண்டாளே என்ருர் குரவர் புன்முறுவலித்தபடியே. சிரித்தான்! "யாரை மணந்திருப்பாள்என்பது யான் அறிந்ததே" என்று மனச்சோர்வுடன் கூறிய தவசீலன், "ஸில்வியா மனச்சந்தோஷத்துடன் இருக்கிருளா?" என்று குரவரை வினவினுன் அவள்மனதை ஆழம்பார்க்கும்நோக்குடன். "அவள் பரமானந்த இன்பத்தில் மூழ்கியவளாயிருக்கிருளே. நடனமாடிக்கொண்டேயிருந்தாலும் இவ்வித பாக்கியத்தை அனுபவிப்பாளோ என்னமோ" என்ருர் குரவர். "குழந்தைகள் இருக்கின்றனவா?" என்று வினுத்தொடுத்தான் தவசீலன். "ஆம், எப்போது

(அடுத்த பக்கம் பார்க்க)

## கீழ்மையன்ருே!

கொந்தளிக்கும் அலைகடலில் பெரியமீன்கள்
கூட்டத்தின் மத்தியிலும் சிறியமீன்கள்
எவ்வித அச்சமின்றி உயிரை மாய்க்கும்
எண்ணமின்றி வாழ்கிறதே, துணிவு என்னே!

கொத்துகின்ற பறவைக்கூட்டம் தம்மினத்தைக்
கொன்றுதின்னும் என்றஞ்சி மண்புழுக்கள்
கத்திக் கத்தித் தம்முயிரை அழிக்க எண்ணு
கடமைசெய்து காலமதைக் கழிப்பதைப்பார்.

சீறுகின்ற புலி, சிங்கம் உள்ளகானில்
சிறுமுயலும் துணிவுடனே வாழக்கண்டேன்
வீறுகொண்ட புயல், மழையில் தயங்கிடாமல்
வீரமுடன் வாழுதடா சிறிய சிட்டு.

தேனீக்கள் மலர்கள்தோறும் சென்றுசென்று
சேர்த்துவைக்கும் தேன்அதனை மனிதன்கண்டால்
தானெடுத்துச் சுவைத்திடுவான் இருந்தும் அவை
தற்கொலையை நினைப்பதில்லை, கோழையில்லை.

மானிலத்தில் தோல்விதுன்பம் கண்டுநொந்து
மனிதர் சிலர் தம்முயிரை மாய்க்கின்ருரே!
நாமவரைக் கோழை என்போம் வாழ்வதற்கு
ஞானமில்லா இவர்கள் செய்கை கீழ்மையன்ருே!

ஆசிரியர்: ச. அமிர்தநாதர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லூசிபர் கூட்டிய மகாநாடு

"உலகெங்கும் உச்சிமகாநாடுகள்! வல்லமைபொருந்திய வல்லரசுகளிடையே வட்டமேசை மகாநாடுகள்! நாடெங்கும் நல்லெண்ணத் தூதுக் கோஷ்டிகள். பேச்சுவார்த்தைகள். இப்படியே தினமும் உலகம் முன்னேற்றப்பாதையிற் செல்கிறது. நாம்மட்டும் இதற்கு விதிவிலக்கா? ஏன் கடந்த வருடம் நமது சத்துருக்களான சத்திய திருச்சபை ஆயர்கள் அனைவரும் பாப்புவின் தலைமையில்கூடித் திட்டங்கள் பலதீட்டினார்களே! நாமும் ஒரு மகாநாடு நடத்தித்தான் ஆகவேண்டும்"—லூசிபரின் சிந்தனையில் தோன்றிய எண்ணங்கள் இவை.

தனது அந்தரங்க காரியதரிசி கறுப்பனை அழைத்துத் தன் எண்ணத்தை வெளியிட்டான் லூசிபர். அவன் எண்ணத்தைச் 'சபாஷ்' போட்டு வரவேற்றான் கறுப்பன். அனைத்துலகிலுமுள்ள பசாசுகளின் தலைவர்களுக்கு அனுப்பப்பட்டன அழைப்பிதழ்கள். மகாநாட்டுக்கு வேண்டிய ஆயத்தங்களைக் கவனிப்பதில் ஆயிரத்திற்குமதிகமான பசாசுகள் பங்குகொண்டன. தடல்புடலான ஆயத்தங்கள். நவீனமுறையில் ஒலி, ஒளி அமைப்புகளுடன் சிறந்து விளங்கியது மகாநாட்டுமண்டபம்.

மாதம் ஒன்று மறைந்தது. கடல் கடந்து வந்தன பல பசாசுகள். காடு மேடுகடந்தும் அனேகம் வந்தன. சனசமுத்திரம்போல் காட்சியளித்தது மகாநாட்டுமண்டபம். எல்லாம் ஆயத்தம். பத்திரிகை நிருபர் திரு. 'சடார்' அவர்களும் விசேஷ அனுமதியுடன் பிரசன்னமாயிருந்தார். மகத்தான வைபவங்களுடன் லூசிபர் மகாநாட்டை ஆரம்பித்துவைத்தான். ஆரம்ப உரையாகக் கெர்ச்சித்தான்: 'என் சகோதரர்களே! அதிககாலத்துக்குப் பின் உங்களைச் சந்திக்கச் சந்தர்ப்பங் கிடைத்ததையிட்டு மிக்க மகிழ்ச்சி. காடு, மேடு கடந்து எமது சபையின் வளர்ச்சிக்கு உங்கள் கருத்துக்களைத் தெரிவிப்பதற்குவந்துள்ளீர்கள். உங்கள் பூரணஒத்துழைப்பைஎமக்குத் தருவீர்களென எதிர்பார்க்கிறேன். உலகம் முன்னேறுகிறது. அதிலும் சத்திய திருச்சபையில் எவ்வளவோ மாற்றங்கள். நாம்மட்டும் சும்மாவிருந்தால் முடியுமா? இல்லை. இன்றே செயலாற்றத் தொடங்கவேண்டும்' என்றுகூறி மகாநாட்டு ஒழுங்குமுறைகளை வாசித்துக்காட்டியது. ஒவ்வொன்றும் தத்தம் திட்டங்களை முறைப்படி கூறிக்கொண்டன.

முதலில் முகிலன் எழுந்தான். "நண்பர்களே! எமதுதலைவர் கூறியதுபோல் சத்தியதிருச்சபை தனது வளர்ச்சியை நோக்காகக்கொண்டு பலவித திட்டங்களையும் தீர்மானங்களையும் செய்து செயல்படுகின்றது. இருந்தும் கடந்த வருடம் கத்தோலிக்க திருச்சபையின் வச்சிரத்தூண்களாய் விளங்கிய 23-ம் அருளப்பபாப்புவும், அமெரிக்க ஜனாதிபதி கென்னடியும் மறைந்ததையிட்டு நாம் பெருமைபாராட்டவேண்டும். (கரகோஷம்) அவர்கள் இன்றுமட்டும் இருந்திருந்தால் எத்தனை வழிவகைகளைக் கையாண்டிருப்பர். ஆனால், ஒன்று 23-ம் அருளப்பர் ஆரம்பித்துவைத்த வத்திக்கான் பொதுச்சங்கம் இன்று தொடர்ந்து சின்னப்பபாப்புவின் தலைமையின்கீழ் தன் வேலைகளைத் தொடர்ந்து செய்கிறது. அருளப்பரைத் தொடர்ந்து சின்னப்பர் இதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளார். இச்சங்கத்தின் முக்கியநோக்கம் பிரிவினைச் சபைகளிடையே ஒற்றுமையை வளர்ப்பது என்றும் பேசப்படுகிறது. நாம் இதுவரை இருந்ததுபோல் கவலையற்றுஇருந்துவிட்டால் ஒன்றும் சித்தியுறாது. செயல்படத் தொடங்கவேண்டும்" என்றுகூறி உட்கார்ந்தது.

அடுத்து 'சடார்' எழுந்தான். "தோழர்களே! இவ்வயோதிபகாலத்திலும் என்னைப்பேசும்படி நிகழ்ச்சியில் குறிக்கப்பட்டிருக்கிறது. இருந்தும் நான் அதிகம்பேசாமல் இரண்டொரு வார்த்தைகள்கூறி முடிப்பேன், மன்னிக்கவும். முன்புபேசிய முகிலன் அருளப்ப பாப்புபற்றிக்குறிப்பிட்டார். உலகைக் கவர்ந்த மனிதர் என்று புகழ்பெற்ற அவர் இன்றுமட்டும் இருந்திருந்தால்? ஏன் இப்போது இருக்கும் சின்னப்ப பாப்புவும் பழைய சம்பிரதாயங்களை மாற்றியமைத்துப் பலஸ்தீன யாத்திரையை மேற்கொண்டாரே. அங்கு சென்றதினால் பிரிவினைச் சபைகளில் ஒன்றான 'ஓதொடொக்ஸ்' சபைஅதிபர் அத்தனகோரசைச் சந்தித்துக் கிறிஸ்தவ ஒற்றுமை பற்றி உரையாடியது அனைவரும் அறிந்ததே. இத்தகைய வழிகளைப் பின்பற்றி நாமும் வேலைகளை மேற்கொண்டால்தான் திருச்சபையை ஒரு அளவிலாவது தோற்கடிக்கலாம்" என்று கூறிமுடித்தது.

அடுத்து இந்திய நாட்டின் சார்பில் ஆஜராயிருந்த 'மூர்க்கன்' எழுந்தான். "அன்பர்களே! இவ்வருட இறுதியில் எமது நாட்டில் சர்வதேச சற்பிரசாத மகாநாடு நடைபெற இருக்கிறது. அதற்கும் சின்னப்ப பாப்பு வரக்கூடுமென்ற வதந்திகள் அடிபடுகின்றன. உலகின் பல்வேறு நாடுகளிலிருந்து பல்லாயிரக்கணக்கான யாத்திரிகர்கள்பங்குகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆயத்தவேலைகள் அமளிதுமளியாக நடைபெறுகின்றன. ஏன் நமது அரசாங்கம்கூட அதற்குப் பூரண ஆதரவு அளிக்கிறது. பார்த்தீர்களா? நாம் பேசாமல் இருந்ததன் பயன். சிந்திப்போம்! செயலாற்றுவோம்!!" என்று ஒரு குட்டிப்பிரசங்கம் செய்தது.

இலங்கையின் சார்பில் சமுகமாயிருந்த 'சனியன்' எழுந்தான். "தோழர்களே! எமது நாட்டில்மட்டும் எத்தனை வெற்றிகள். அவற்றை எல்லாம் இங்குகூறி நான் பெருமை பாராட்டவரவில்லை. இவற்றில் சித்திபெற நானும் என் தோழர்களும் மக்கள்மூலம் பெற்ற எதிர்ப்புகளோ அனந்தம். இன்னும்பல திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. இதையிட்டு எல்லோரும் பெருமைப்படவேண்டும்." பலத்த கரகோஷத்திடையே ஆசனத்தில் அமர்ந்தான் 'சனியன்'!

இப்படியே மற்றும்பல பசாசுகள் தத்தம் நாட்டு நிலைமைகளை எடுத்துக் கூறின.

மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட முக்கிய தீர்மானங்கள் சில வருமாறு: நரகம், பசாசு போன்ற பயங்கரத்துக்குரிய படங்கள், செய்திகள், விளக்கங்கள் என்பன பத்திரிகைகளிலும் புத்தகங்களிலும் இருந்து தணிக்கை செய்யப்படவேண்டும்.

மது, சூது, சினிமா என்பவற்றிற்கு ஆதரவு கொடுக்கும்வகையில் இந்நிலையங்கள் ஒவ்வொரு நாட்டிலும் ஸ்தாபிக்கப்படவேண்டும்.

பாடசாலைகளில் 'குடியாத வீடு விடியாது' என்ற சுலோக அட்டைகள் தொங்கவிடவேண்டும். அத்துடன் 'மது ஆதரிப்பு' வாரம் ஒன்றையும் கொண்டாடவேண்டும்.

நரகத்தை எல்லா சௌகரியங்களும் உள்ள இடமாக மாற்றிப் படம்பிடிப்பாளர்களை அழைத்து, இலவசப்படம் தயாரித்து ஒவ்வொரு தேசத்திலும் இலவசமாய்க் காண்பிக்கவேண்டும். 'நரக இன்பம்' என்னும் பத்திரிகை ஒன்றையும் நடத்தவேண்டும். பசாசுகளான எமது பயங்கர தோற்றத்தை விஞ்ஞான முறைகளைக் கொண்டு மாற்றி அமைக்கவேண்டும்.

இந்நிலையில் லூசிபருக்கு அந்தரங்க தீவிலிருந்து அவசர அழைப்பு வந்தபடியால் காலவரையின்றி மகாநாடு ஒத்திவைக்கப்பட்டது.

இ. பேர்னட்.

# ஒருகதவு அடைக்கப்பட்டால்......

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பார்த்தாலும் இரண்டுமூன்று சிறுவர்களுடன் காண்கின்றேன் அவளை" என்றார் குரவர் பிராங்கோ. தவசீலனுக்குத் தலைசுற்றியது. இனந்தெரியாத ஒருவேதனை உள்ளத்தையே உறுத்தியது. "கைக்கெட்டியது வாய்க்கெட்டாமற் போயிற்றே" என்று அவனை என்னவோவெல்லாம் நினைக்கத் தூண்டியது. தன்னிலும் பார்க்க டாக்டர் ருத்ரா எவ்வளவோ தூரம் அதிர்ஷ்டமுள்ளவர் என்று பொருமை ஏற்பட்டது அவன்மனதின் அடித்தளத்தில்.

## இதய அன்பை ஈந்தார் யேசு!....

மனதை ஓரளவு திடப்படுத்திக் கொண்டான் தவசீலன். "தந்தையே! குறைநினைக்காதிர்கள். நான் ஒரேயொருதடவை ஸில்வியாவைக் காணலாமா?" என்று ஆவலுடன் கேட்டான் தவசீலன். "நிச்சயமாக! சந்தோஷத்துடனே உன்னை அழைத்துப் போவேன்" என்றார் குரவர். இடப்புறமாகப்பிரிந்துசென்ற தெருவைச் சுட்டிக்காட்டினார். அவ்வழியே நான்குமைல் தூரம் ஓடியபின் சில கட்டிடங்கள் கண்களுக்குத் தென்பட்டன. "அங்கேதான் நம் ஆடலரசி ஸில்வியா இருக்கிறாள்" என்று அன்புடன் கூறினார் குரவர். காரை ஓட்டிச்சென்ற தவசீலன் சட்டென முகத்தைக் குரவர்பக்கம் திருப்பி: "டாக்டர் ருத்ராவின் தற்போதைய பெயர் யாது?" என்று வினவினான். "அவர் கத்தோலிக்க சமயத்தைத் தழுவியதை அறிந்திருக்கிறாயே. அவர் பெயர் டாக்டர் பிரான்சீஸ்" என்றார் குரவர். "கட்டாயம் கத்தோலிக்க சமயத்தைத் தழுவுவார்என்று எனக்குத் தெரியும்" என்றான் தவசீலன்.

டாக்டர் பிரான்சீஸ்" எனப்பெயர் பலகை மாட்டப்பட்ட பங்களா ஒன்றின்முன் காரைநிறுத்தினான் தவசீலன். பொங்கியெழுந்த சிரிப்பை அடக்கிக்கொண்டார் குரவர். இங்கே எதற்கு? கடற்கரையில் நாம் தரித்தால் இன்னும் சற்றுநேரத்தில் ஸில்வியாவைக் காணலாம் என்றார் குரவர். டாக்டர் பிரான்சீசைச் சந்திக்க விரும்பாத தவசீலன் "அதுவும் நல்லதற்கே" என்றுகூறி இருவருமாக மணற்றரையில் இறங்கிக் காத்திருந்தனர்.

சற்றைக்கெல்லாம் "அதோ ஸில்வியா" என்றுகாட்டினார் குரவர். திரும்பிப்பார்த்தான் தவசீலன். "யாரைச் சொல்லுகிறீர்கள்" என்று தடுமாறிக் கேட்டான். "அதோ வருபவளே ஸில்வியா" என்று அடித்துச் சொன்னார் குரவர் பிராங்கோ. திகைத்துப்போனான் தவசீலன். பேசநா எழவில்லை. "கூடவரும் சிறார் அவள் தலைவியாக இருக்கும் ஆச்சிரமத்திலுள்ள அநாதைச் சிறுவர்கள்" என்று மேலும்கூறினார் குரவர். ஆனால், தவசீலனோ உணர்ச்சியற்ற மரமாய் நின்றான், அவன் கண்ட காட்சிதான் என்ன?

ஸில்வியா! ஆம், அவள் கன்னியர் உடையில் விந்திவிந்தி நடந்து வந்துகொண்டிருந்தாள். அவள்தான் இதயஅரசர் யேசுவின் அன்பைப் பெற்றுவிட்டாளே. திரும்பவும் தன்னிலையடைந்த தவசீலன் பெருமூச்சு விட்டபடியே "அவள் உத்தமமான பங்கைத் தெரிந்துகொண்டாள்" என்று கூறிமுடித்தான். ஆம் அன்று ஸில்வியாவின் கால் ஒடிந்திராவிடில் இன்று அவள் இதயஅன்பர் யேசுவின் இதயத்தில் ஆடலரசியாக முடியுமா? ஒருகதவு அடைபட்டது. மறு கதவோ திறபட்டது.

(சுபம்)

## 8-ம் வருட மரண ஞாபகம்

மதுரயேசுவே! மரியம்மா பொன்னையாவுடைய ஆத்துமத்திற்கு நித்திய இளைப்பாற்றியைக்கொடுத்து மோட்ச இராட்சியத்தில் சேர்த்துக்கொள்ளும்.

என் அருமை மனைவியும் எங்கள் அருமைத் தாயாருமான திருமதி மரியம்மா பொன்னையா மண்ணுலகைவிட்டு மறைந்த 8-ம்வருடம் 27-6-64-ல் பூர்த்தியாகிறபடியால் அன்று சுண்டிக்குளி, அர்ச். ஸ்நாபக யுவானியார் கோவிலில் ஒரு துக்கப்பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப்படும். இதனைக் கண்ணுறும் யாவரும் இவ்வான்ம இளைப்பாற்றிக்காக வேண்டும்படி தயவாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

இவவின் பிரிவால் துயருறும்:
பிரிய பத்தா: பே. சி. பொன்னையாவும், அருமைத் தாயை இழந்து பரதவிக்கும் பிள்ளைகளும்.

மரியவாசா,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

திரு. அந்தோனிப்பிள்ளை பிரான்சீஸ்
அவர்கள்
அமரபதமடைந்த

## 1-ம் வருட ஞாபகம்

| பிறப்பு: | இறப்பு: |
| --- | --- |
| 30—7—1900 | 25—6—1963 |

நித்தியபிதாவே! உமது திருக்குமாரனின் விலைமதியாத திருஇரத்தத்தைப் பார்த்து, உத்தரிக்கிற ஆத்துமாக்கள் பேரில் இரக்கமாயிரும்.

எங்களை விட்டுப்பிரிந்தும் எங்கள் ஞாபகத்தை விட்டுப்பிரியாத அந்தோனிப்பிள்ளை பிரான்சீஸ்அவர்களின் ஆத்தும இளைப்பாற்றிக்காக யாழ்ப்பாணம், பரி. கொஞ்சேஞ்சிமாதாவின் ஆசனக்கோவிலிலும் (பாடற்பூசை), கிளிநொச்சி, அர்ச். தெரேசம்மாள் கோவிலிலும், நாரந்தனை, அர்ச். பேதுருவானவர் கோவிலிலும், உருத்திரபுரம், 2-ம் வாய்க்காலில் உள்ள கோவிலிலும், குருகலை, பரி. செபமாலைமாதா கோவிலிலும் 25-6-64-ல் திவ்வியபூசைப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படும்.

இப்பலிகளில் பங்குபற்றுவோர் அன்னாரின் ஆன்மஇளைப்பாற்றிக்காக இப்பலிகளை ஒப்புக்கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

இவர்பிரிவால் துயருறும்
மனைவி: டெய்சி பிரான்சீஸ்
மக்கள்: எக்ஸ். ஆர். பிரான்சீஸ், எஸ். பி. பிரான்சீஸ், அன்ரனிற்று பிறிஜ்ஜெற் அல்போன்ஸ்.
மருமக்கள்: ஹெலன் மேபிள் பிரான்சீஸ், பி. அல்போன்ஸ்.

29, ஜயந்திநகர்,
உருத்திரபுரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அன்பார்ந்த தம்பி, தங்கையர்களே உங்களுக்கு என் அன்புகனிந்த வணக்கம்!

குழந்தை யேசுவின் அர்ச். தெரேசம்மாள் கார்மேல் சபையைச் சேர்ந்த ஒரு கன்னிகை. தனது சபையின் ஒழுங்குப்படி அவள் தனது மடத்தின் எல்லையைக் கடந்து வெளியே செல்ல முடியாது. அப்படியிருந்தும் வானத்தின் நட்சத்திரங்களைப் பார்க்கும் பொழுதெல்லாம், "வானத்தில் நான் எத்தனை நட்சத்திரங்களைப் பார்க்கிறேனே அத்தனை ஆத்துமங்கள் மனந்திரும்ப ஆசிக்கிறேன்" என்பாள்.

இது என்ன? முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்ட கதையாய் இருக்கிறதே என்று நீங்கள் சொல்லுவீர்கள். ஆனால், ஒன்றுமட்டும் உறுதி. அர்ச். சவேரியார் கடல்களையும், மலைகளையும் கடந்து தேசம் பலசுற்றி எவ்வளவு ஆத்துமங்களை மனந்திருப்பினரோ அத்தனை ஆத்துமங்களை யேசுபதம் சேர்த்தாள் சிறியபுஷ்பம்.

இது உங்களுக்குப் பெரும் வியப்பைத்தரலாம். அந்தவழி வெகுசுலபம். நீங்களும் செய்யலாம். வானத்தின் நட்சத்திரங்களைப் பெறுவது இயலாத காரியந்தான். ஆனால், ஆத்துமங்கள் பலவற்றை மனந்திருப்பலாம். இந்த இரகசியம் உங்கள் செபத்தில் அடங்கியிருக்கிறது. செபஅப்போஸ்தலசபையின் நோக்கம் இதுதான்.

உங்கள் தினசரி செபங்கள் வீணாகாதபடி தினசரி காலையில் அவைகளை யேசுவின் திருஇருதயத்துக்கு ஒப்புக்கொடுங்கள். இதன் வழியாக நீங்களும் பல ஆத்துமங்களை மனந்திருப்பிய அப்போஸ்தலர்கள் ஆவீர்கள்.

சுபம்! —அண்ணா.

## மந்திரவாதி

ஆபிரிக்காவில் வேதம்போதிக்கும்படி ஒரு குருவானவர் போயிருந்தார். பலகிராமங்கள் அவர் பொறுப்பில் விடப்பட்டன. ஒருகிராமத்தில் மக்கள் ஒரு மந்திரவாதிமேல் நம்பிக்கை கொண்டிருந்தனர். அவனுடைய கபடநாடகத்தை ஊராருக்குப் பிரத்தியட்சமாய்க் காட்டக் குருவானவர் தீர்மானித்தார்.

ஒருநாள் அவர் அந்த ஊருக்குப் போய்ச் சேர்ந்ததும், பெரிய போர்வைகளால் தம்மைமூடிப் படுத்துக்கொண்டு, பேய்பிடித்தவர்போல் கத்த ஆரம்பித்தார். கிராமவாசிகள் இரக்கங்கொண்டு மந்திரவாதியை அழைத்து வந்தார்கள். குருவானவருடன்வந்த உபதேசி அவனிடம் போய், "ஐயா, இந்த வெள்ளைமனிதர் என்னைத் தம்முடன் அழைத்து வந்தார். இப்பொழுது அவர் சாகப் போகிறார். என்னசெய்வது?" என்றான்.

இந்தக் கிராமத்துக்கு வரும்வழியில் தெற்கேயுள்ள காட்டுவழியாய் வந்தீர்களோ?"என மந்திரவாதி ரொம்ப அறிந்தவன் போல் கேட்டான்.

" ஆம், வந்தோம்,"

"அந்த அகன்றஆற்றைக் கடந்து வந்தீர்களா?"

"ஆம்."

இதைக் கேட்டதும் மந்திரவாதி மிகப்பயந்தவன் போல் தோன்றினான். குருவானவரும் அதிகமதிகமாய்க் கத்தினார்.

"இது பொல்லாத நோய். இந்த மனிதர் வியாதியாய் விழுந்தது ஆச்சரியமல்ல. அந்தக்காட்டில் ஒரு பெரிய பசாசு இருக்கிறது. அதன் உத்தரவின்றி இவர் காட்டைத் தாண்டி வந்திருக்கிறார். இவரைக் காப்பாற்ற வேண்டுமானல் ஒரு சேவற்கோழியும், கைநிறையப் பணமும் கொண்டுவாருங்கள். அல்லாவிடில் இந்த வெள்ளையர் இறந்து போவார்"என மந்திரவாதி சொன்னான். உடனே குருவானவர் குதித்தெழுந்தார். அவர் நல்ல சுகத்துடனிருந்தார். "இதுதான் உன் மாந்திரீகமோ?"எனக் குருவானவர் சிரித்துக்கொண்டு கேட்டார். மந்திரவாதி வெட்கிப்போய் அப்படியே ஓடிமறைந்துவிட்டார்.

## ஞானிகளின் வாக்குகள்

கி. மு. ஆறும் நூற்றாண்டிலே கிரேக்கதேச பண்டிதர்களில் 'சத்த ஞானிகள்' என்று அழைக்கப்பெற்ற ஏழுபேர் பெரிதும் விவேக சாதுரிய முடையவர்களாய் விளங்கியிருந்தனர். அவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விருதுவாக்கியங்களைக் கொண்டிருந்தனர்.

"உன்னை அறிந்துகொள்" —சோலன் ஞானி
"உன்முடிவைச் சிந்தித்துக்கொள்" —சில்லோ ஞானி
"உன் சமயத்தை அறிந்துகொள்" —பித்தாக்கஸ் ஞானி
"மனிதருட் பெரும்பாலார் தீயவர்" —பியாஸ் ஞானி
"முயற்சியால் ஆகாதது ஒன்றில்லை" —பெரியாந்தர் ஞானி
"மிதம் கடப்பதை விலக்கு" —கிறயோப்புயலஸ் ஞானி
"அழிவுக்கு முன்னோடி பிணைநிற்றல்" —தேலீஸ்ஞானி

பூமண்டலத்தில் தோன்றிவிளங்கிய, விளங்குகின்ற, விளங்கவிருக்கின்ற பெரிய ஞானிகளுக்கெல்லாம் ஞானமும், புத்தித் தீட்சணியமும் பாலித்தவரும், பாலிக்கிறவரும், பாலிக்கப்போகிறவரும், நித்திய ஞானமானவரும் மனுவடிவந்தாங்கிய தேவசுதனுமாகிய யேசுக்கிறிஸ்துநாதரென்ற திவ்விய மோட்ச ஞானியாரும் ஞானுசாரம் பொதிந்த எத்தனையோ ஞானவாக்குகளைத் திருவாய் மலர்ந்திருக்கிறார். அவற்றுள் ஒன்று:

"மெய்யாகவே மனிதன் உலகமெல்லாம் ஆதாயமாக்கிக் கொண்டாலும் தன் ஆத்மாவைச் சேதப்படுத்தினல் அவனுக்குவரும் பிரயோசனம் என்ன" என்பதே.

## முடக் கொத்தான்

(சென்றவாரத் தொடர்ச்சி)

என்ரை புள்ளே இப்படிச் செய்யுமோ? இது ஆரேட கதை!

நீ நெனைக்கிறதில தப்பு ஒண்ணுமில்லை. நீ அவன வளக்கிற மொறையிலதான் தப்பு. வரட்டும் அவன் கால ஒடிச்சு மூலையில போட்டிறன்.

"கண்ணால காண்பதும் பொய்யே, காதால கேட்பதும் பொய்யே"... டேய், யார்டா அது. கம்பர் மகன் அம்பிகாபதி ...

யாருமில்லேப்பா; தங்கள் மகன் தயங்காத சிங்கம். இந்த அகிலத்திலத்தின் அணையா சோதி; சாமிநாதனின் தங்கப் புதல்வன்; இந்தச் சாந்தமற்ற சமுதாயத்தில் ...

டேய்...... .. இப்ப யாரெடா அப்பன்? உனக்கு நான் அப்பன இல்லே எனக்கு நீ அப்பனு?......

நாசமாப் போச்சு; ஏன் அப்பா இந்தக் கேள்வி?...... தங்கள் பாதாரவிந்தத்தை ஆதாரமாகக் கொண்ட இந்த அற்பனைப்பார்த்து, தங்களுக்குத் தந்தையோ எனக் கேட்பதா வெட்கம்! வெட்கம்!!

அடெ கண்ணு! உன்னை ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்ணுஎண்டு வளர்த்து உன்னை இந்த நிலைக்கு ஆளாக்கவா......... அப்பனே கடவுளே. அது இருக்கட்டும் முதலியாரோட மதிலால ஏன்டா குதிச்சே...

நாசமாப் போச்சு ... (தொடரும்)

## விருந்து 8

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | ப | த் | தா | ம் | ❀ | ❀ |
| 2 | ❀ | | ன் | | ❀ | ❀ |
| 3 | ❀ | | ப | | | ❀ |
| 4 | | | க் | | ர | |
| 5 | | ள | ச் | | ட் | |
| 6 | | த் | | ம | | ❀ |
| 7 | ❀ | ❀ | | உ | | வ |
| 8 | | ன் | | ல | | ❀ |

1. அர்ச். 10-ம் பத்திநாதர் சிறுவர்களின் பாப்புஎன்ற சிறப்புப் பெயர் பெற்றவர்......

2. தேவநற்கருணை பெறுவதற்கு முன் ......... மணித்தியாலங்கள் என்கிலும் சரீரஉபவாசம் வேண்டும்......

3. வாடாதமாலை.

4. இரண்டு மனிதர்கள் செபம் பண்ணும்படி தேவாலயத்திற்குள் போனார்கள். அவர்களில் ஒருவன் பரிசேயன். மற்றவன்......?

5. நமக்குத் தெய்வம்போன்றது.

6. உண்மை பேசுபவன்.........ஆவான்.

7. கடைமாறிநிற்கும் தொழிலாளி.

8. பிறர்நலம் கருதுபவர்களுக்கு இது இருக்கக்கூடாது.

* * *

நிபந்தனைகள் :

- நிரப்பப்பட்ட பத்திரத்தைக் கத்தரித்து, அஞ்சல் அட்டையில் ஒட்டி, அண்ணாவின் முகவரிக்கு அனுப்பவேண்டும்.
- ஒருவர் ஒருகூப்பன் மாத்திரம் அனுப்பலாம்.
- முடிவு திகதி 27–6–64.

* * *

### சிறுவர்விருந்து அங்கத்தினர்

சிறுவர்விருந்தில் அங்கத்தினராகச் சேரவிரும்பும் 16 வயதிற் குட்பட்ட தம்பி, தங்கைகள் கீழ்வரும் பத்திரத்தைப் பூர்த்திசெய்து, அஞ்சல் அட்டையில் ஒட்டி, அண்ணா, சிறுவர் விருந்து, காவலன் அலுவலகம், தபா. பெ. இல. 2. யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு எழுதவும்.

சிறுவர் விருந்து
அங்கத்தவர் மனுப்பத்திரம்
பெயர் செல்வன்/செல்வி .........
............................................
முகவரி.......................................
............................................
பிற. திக. ..................................

● காலஞ்சென்ற அருளப்பபாப்பரசர் மத்தியகாலங்களில் வசித்திருப்பாரானல் கிறீஸ்துசமயத்தைப் பிளவுபடுத்திய பிரிவினைகளைத்தடுத்து நிறுத்தியிருப்பாரென்றும், அவர் வத்திக்கான் பொதுச்சங்கத்தைக் கூட்டியது "நிகழ்காலத்துப் புதுமை" யென்றும் போஸ்றன்நகர் அதிமேற்றிராணியாரான கருதினல் குஷிங்ஆண்டகை கூறுகின்றார்.

● தங்கள்இராணியார் ஒருகத்தோலிக்கராவதற்கு உரிமைபூண்டவரென்று உலாந்தமக்களில் நூற்றுக்கு 77விகிதமானோர் நம்புகிறார்களெனப் பொதுசன அபிப்பிராயமூலம் கண்டறியப்பட்டிருக்கிறது. உலாந்தஇராசகுடும்பங்கள் 16-ம்நூற்றாண்டுமுதல் புறொட்டஸ்தாந்த குடும்பங்களாக இருந்துவருகின்றன.

● தான் கத்தோலிக்க திருச்சபையில் சேர்ந்துவிட்டதாகவும், அதனைத் தொடர்ந்து தனக்குள்ள சிம்மாசன உரிமைகளைத் துறந்துவிட்டதாகவும் உலாந்தநாட்டு இறேன்இளவரசி தெரிவித்தபோது அந்நாட்டிலே இவ்வருட ஆரம்பத்தில் பெரியவாதவிவாதங்கள் உண்டானமை உலகமறிந்தசம்பவமே.

● அமெரிக்க ஜனாதிபதியாயிருந்து காலஞ்சென்ற திரு. பிறங்லின் டிறூஸ்வெல்ற்அவர்களின் பௌத்திரரும், 19வயதுடையவருமான ஜேம்ஸ் றூஸ்வெல்ற் கலிபோணியா விலுள்ள கிறிஸ்ரியன் பிறதர்மாரின் நவசந்நியாசமடத்திலே ஓர்இளம் நவசந்நியாசியாகச் சேர்ந்து பிறதர் மத்தியூ டேவிட்எனும் நாமத்தைத் தரித்திருக்கின்றார்.

● பாத்திமாபதியிலே தேவதாயார் காட்சியளித்த 47ஆண்டின் நிறைவுதினமாகிய சென்றவைகாசிமாதம் 13-ந்திகதியன்று அங்கு நிகழ்ந்த திருவைபவங்களுக்குக் கருதினல்பியா ஆண்டகை தலைமைவகித்து, ஹங்கேரியர்கள் தங்கள்நாட்டின் திருச்சபைமேலதிகாரியான கருதினல் மின்ஸ்சென்ரி ஆண்டகையைக் கௌரவிக்குமுகமாக அங்கு கட்டியெழுப்பிய சிற்றாலயத்தை அர்ச். ஸ்ரீபின்போல் பிரதிட்டைசெய்தருளினர்.

### அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றாஞ்சபை

அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றாஞ்சபை மாதாந்தகூட்டம் இம்மாதம் 27-ந்திகதி சனிக்கிழமை பி. ப. 4மணியளவில் சஞ்சூசையப்பர் சிற்றாலயத்தில் வழமைப்பிரகாரம் நடைபெறும். இம்முறை சகோதரர் ஒவ்வொருவருக்கும் மாதாந்த கூட்டத்தைப்பற்றி ஒருஞாபகச்சீட்டு அனுப்புகிறோம். அதைத் தயவுசெய்து மறந்துபோகாமல் கூட்டத்துக்கு வரும்போது கொண்டுவந்து தலைவரிடம் அல்லது அவரால் குறிக்கப்பட்ட ஒருவரிடம் கொடுத்துப்போட வேண்டியது.

A. S. FRANCIS of MARY,
சபைக் கர்த்தருக்காக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்நாட்டுச் செய்திகள்

### ஏழாலையில் மரியாயின்சேனை

ஏழாலை அர்ச். இசிதோர் கோவிலில் சென்ற ஞாயிற்றுக்கிழமை 14-ந்திகதி நல்லஆலோசனை மாதாவின் சைனியம் என்ற நாமத்துடன் மரியாயின்சேனையின் புதுக்கிளை ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. யாழ்ப்பாணக் கொம்மீசியத்தின் தலைவர் இன்னுமோர்சேனை உத்தியோகஸ்தருடன் ஆரம்பச்சடங்கில் பங்குபற்றினர்.

### சிங்கள ஆசிரியர்கள்

வருகிற ஆவணிமுதல் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள தமிழ்ப் பாடசாலைகளுக்குச் சிங்களத்தேர்ச்சி பெற்ற ஆசிரியர்கள் நியமிக்கப்படவிருக்கிறார்கள். இருமாகாணங்களுக்கும் தேவைப்படும் 2,000 சிங்களத்தேர்ச்சிபெற்ற ஆசிரியர்களுக்கான விண்ணப்பங்கள் கல்விப்பகுதியால் கோரப்படவிருக்கின்றன. தமிழில்வாசிக்கவும், எழுதவும் தெரிந்தவர்களான சிங்களத்தேர்ச்சிபெற்ற ஆசிரியர்கள் தெரிந்தெடுக்கப்படுவார்கள். இவர்களுக்கு மாதச்சம்பளம் 150ரூபாவாகும். இவர்கள் தமிழ் மாணவர்களுக்குச் சிங்களம் படிப்பிப்பார்கள்.

### பிரித்துவைக்கும் ஆயுதங்கள்

"இந்நாட்டில்வாழுகின்ற பெரும்பான்மைமக்களின் மொழியும், சமயமும் இதுவரை ஒற்றுமையாக வாழ்ந்திருந்த சகலஇனமக்களையும் பிரித்துவைக்கும்ஆயுதங்களாக அரசியல்வாதிகளால் பிரயோகிக்கப்பட்டுவருகின்றன; இத்தகைய சமுதாயவிரோத நடவடிக்கைகளை ஒழித்துக்கட்டுமாறு உழைக்கும்வர்க்கத்தினர் அனைவரும் முன்வரவேண்டு"மென்று தபால்அதிபர்கள்சங்கத்தின் தலைவரான திரு. வில்பிறெட் பெறேரு அன்று மட்டக்களப்பில்நிகழ்ந்த ஒருகூட்டத்திலே பேசியிருக்கின்றார்.

### கட்சியிலிருந்து விலகினர்

கட்டுகம்பளை எம். பி. திரு. லீலானந்த வீரசிங்கா அரசாங்ககட்சியிலிருந்து சென்றவெள்ளிக்கிழமை இராசினாமாச் செய்திருக்கின்றார். அரசாங்கத்திலே டக்டர் என். எம். பெறேரு சேர்ந்துவிட்டபிறகுஅரசாங்க கட்சியில் தாம்இருப்பது சாத்தியமல்லவென்று காரணம்கூறியிருக்கின்றார். ஒருமாக்ஸீயவிரோதியான இவர் 1960-ம்ஆண்டின் தேர்தலிலே ஒருசுயேட்சை அபேட்சகராக வெற்றிபெற்றுப் பிந்தஅரசாங்ககட்சியில் சேர்ந்துகொண்டார். இவர் இனிமேல் எதிர்க்கட்சியில் சேர்ந்து எந்தக்கட்சியிலும்சேராமல் பணியாற்றவிருக்கின்றார்.

### வேலையில்லாதவர்தொகை

இலங்கையில் வேலையின்றிக் கஷ்டப்படுவார்தொகை மாதந்தோறும் அதிகரித்துக்கொண்டே வருகிறது. மாதந்தோறும் வேலைபெறுவார் தொகை 500பேராயிருக்க, வேலையில்லாதார்தொகை 1,000பேர்வீதம் அதிகரித்துக்கொண்டு வருவதாகத் தொழிற்பகுதி அதிகாரிகள் தெரிவிக்கிறார்கள். கடந்தமாசிவரைமட்டும் வெளிவந்த புள்ளிவிபரப்படி நாடுமுழுவதிலும் 1,57,000பேர் வேலையில்லாதோராகப் பதியப்பட்டிருக்கிறார்கள்.

### பாராளுமன்ற கூட்டத்தொடர்

பாராளுமன்றத்தின் அடுத்தகூட்டத்தொடர் வருகிறஆடிமாதம் 1-ந்திகதி ஆரம்பமாகவிருக்கிறது. இத்தொடரின் ஆரம்பவிழா சுதந்திரஞாபகார்த்த மண்டபத்திலே நடைபெறுமென எதிர்பார்க்கப்படுகிறது. கூட்டத்தொடரின் ஆரம்பத்தைப் பொதுமக்கள் அதிகமாகப்பார்க்க வசதிசெய்வதே இதற்குக் காரணமாம்.

### மந்திரியின் இராசினாமா

கூட்டரசாங்கத்திலே தபால்–தந்திபோக்குவரத்து மந்திரியாக நியமிக்கப்பட்ட மாத்தறைத்தொகுதி எம். பி.யான திரு. மகாநாமசமரவீர தமது மந்திரிபதவியைச் சென்றதிங்கட்கிழமை இராசினாமாச் செய்திருக்கின்றார். மாக்ஸியவாதிகளுடன் கூட்டுச்சேர்ந்த அரசாங்கம் ஒன்றில் தம்மால் பதவிவகிக்க முடியாதென்று இவர் பிரதமருக்குத் தெரிவித்திருக்கின்றார். ஆனால், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியிலேயே தாம்இருந்துகொண்டு காலஞ்சென்றபிரதமர் பண்டாரநாயக்காவின் கொள்கைகளை நிறைவேறச் செய்வதில் தாம் கவனஞ்செலுத்தப் போவதாகவும் இவர் அறிவித்திருக்கின்றார்.

### கூட்டுமந்திரிசபை

ஸ்ரீலங்கா சுதந்திர–சமசமாஜகூட்டரசாங்கம் ஒழுங்காகிப் பிரதமர்ஸ்ரீமா பண்டாரநாயக்கா தலைமையில் புதியமந்திரிசபையும் அமைக்கப்பட்டுவிட்டது. பிரதமர்தலைமையில் புதியமந்திரிசபை சென்றவியாழக்கிழமை பிற்பகல் இராணிமாளிகையிலே மகாதேசாதிபதி முன்பாகச் சத்தியஞ்செய்துபதவியேற்றது. பதினைந்து மந்திரிகளைக்கொண்ட மந்திரிசபையிலே டக்டர் என். எம். பெரேரு, திரு. சம்ஸி குணவர்த்தனு, திரு. அனில் முனசிங்களுைம் மூன்றுசமசமாஜகட்சி அங்கத்தவர்களும், பன்னிரு சுதந்திரக்கட்சி அங்கத்தவர்களும் அடங்கியிருக்கிறார்கள். இந்தப் பன்னிருவரும் சுதந்திரக்கட்சியின் பழையமந்திரிகளே. சமசமாஜகட்சி மந்திரிகள்மூவரும் முறையேநிதிமந்திரி, பொதுமராமத்துமந்திரி, போக்குவரத்துமந்திரிபதவிகள் வகிக்கின்றார்கள்.

### பிரவேசப்பரீட்சை இல்லை

இலங்கைச் சர்வகலாசாலைப் பிரவேசபரீட்சை இனிமேல் நடைபெறமாட்டாதென்று அதன் உதவி றெஜிஸ்திரார் அறிவித்திருக்கின்றார். அதற்குப்பதில் உயர்தரக்கல்விப் பொதுத்தாரதரப் பரீட்சை (ஜி. சி. ஈ. அட்வான்ஸ் லெவல்) பேறுகளைக் கொண்டே மாணவர்கள் இனிமேல் சர்வகலாசாலையில் சேர்க்கப்படுவார்கள். அதனால் சர்வகலாசாலையில் சேர்ந்துஉயர்தரக்கல்விபயிலவிரும்பும் மாணவர்கள் உயர்தரகல்விப் பொதுத்தாரதரப் பரீட்சைக்குத் தோற்றுமாறு கேட்கப்படுகின்றார்கள்.

### காலி ஜிம்கானு சுவீப்

கடந்த அறுபதுவருடகாலமாக நடைபெற்றுவந்துள்ள காலி ஜிம்கானுகிளப்பின் இரண்டுரூபாச்சுவீப் நிறுத்தப்படமாட்டாதெனறு கிளப்பின்காரியதரிசி இப்போது தெரிவித்திருக்கின்றார். வழமைபோல அதன் சுவீப்புகள் தொடர்ந்துநடைபெற்றுவர உள்நாட்டுமந்திரி அனுமதித்திருக்கின்றார். இந்தச்சுவீப் நிறுத்தப்படவேண்டுமென்று இதற்குமுன் தீர்மானிக்கப்பட்டமைக்குக்காரணம், மந்திரிகாரியாலய அதிகாரிகளுக்கும், கிளப் அதிகாரிகளுக்குமிடையில் ஏற்பட்டயாதோ விளக்கக்குறைவேயென்று சொல்லப்படுகிறது.

### சிரமதானத்தின் பலம்

"மகாவலிகங்கையைத்தானும் சிரமதானத்தின்மூலம் வடக்குமுகமாகத் திருப்பிவிடமுடியும்; இதற்கு இலங்கைமக்கள் அனைவரும் ஒத்துழைக்கவேண்டும்; எகிப்திலே அஸ்வான் அணைக்கட்டுமூலம் நைல்நதியானது சகாராபாலைவனத்துக்குத் திருப்பிவிடப்பட்டு அப்பாலைவனமே சோலைவனமாக்கப் படுகி[illegible] மகாவலி கங்கை வடமுகமாகத் திரும்புவது ஆச்சரியப்படத்தக்கதல்ல; இலங்கையின் எதிர்கால அபிவிருத்தி வேலைகளைச் சிரமதானமூலமே செய்யவேண்டியநிலைமை ஏற்பட்டுள்ளது; நாட்டிலுள்ள கிராமாபிவிருத்திச் சங்கங்கள் சரிவர இயக்கப்படவில்லை; அதனால் இச்சங்கங்களுக்குப் புனர்வாழ்வளித்து, அவைகள் பூரணசிரமதானஇயக்கமாக மாறவேண்டும்" என்று முரசுமோட்டைச் சிரமதான இயக்கமுகாமில் அகில-இலங்கைக் காந்தியசேவாசங்கப் பொதுச்செயலாளர் திரு. எஸ். கே. தம்பிப்பிள்ளை அவர்கள் பேசியிருக்கிறார்.

### புரட்சிச் சதிவழக்கு

புரட்சிச்சதிவழக்கில் 23-ம்எதிரியான திரு. எஸ். ஜி. ஜாக்ஸனும் விடுதலை செய்யப்பட்டிருக்கின்றார். இந்தவழக்கில் விடுதலைசெய்யப்பட்ட மூன்றுவதுஎதிரி இவராவர். இவர் மீது குற்றம் சுமத்தக்கூடிய சாட்சியங்கள் இதுவரை முடிக்குரியதரப்பால் கொண்டுவரப்படாமையே இவர் விடுதலைபெறக் காரணமாகும். ஏற்கனவே 22-ம்எதிரியான திரு. டேவிட் தம்பையாவும் 24-ம்எதிரியான திரு. றொட்னி டிமெல்லும் தங்களுக்குக் கெதிராகச் சாட்சியமளிக்கவிருந்த திரு. ஓர் என்பார் இறந்தமையாலே விடுதலை செய்யப்பட்டார்கள்.

### தமிழில் பதில் எழுதுக

தமிழில்வரும் கடிதங்களுக்குரிய பதில்களைத் தமிழிலே எழுதியனுப்பவேண்டுமென்று காணி-நீர்ப்பாசன மந்திரிகாரியாலய நிரந்தரக்காரியதரிசி திரு. எம். ஸ்ரீகந்தாஅவர்கள் தமது காரியாலயத்தின் கீழுள்ள சகலபகுதிகளினதும் தலைவர்களுக்கு உத்தரவிட்டிருக்கின்றார். தமிழிலோ, சிங்களத்திலோ, ஆங்கிலத்திலோ ஏதாவதுகடிதம் வந்தால் அதற்குரியபதிலை அதுஎழுதப்பட்ட அதேமொழியிலும் எழுதவேண்டும். அரசகருமமொழியில்பதில்எழுதப்பட்டாலும் அத்துடன் கடிதம்எழுதியிருந்தமொழியிலே அதன்மொழிபெயர்ப்பு இணைக்கப்படவேண்டும். உத்தியோகமொழிச் சட்டத்தையும், அதுவிஷயமாய் மந்திரிசபைசெய்துள்ள முடிவையும் அனுசரித்தே இவ்விதம் உத்தரவிடப்பட்டிருக்கிறது.

### நாவாந்துறை ரோ. க. த. க. பாடசாலை

சென்றவாரம் கொண்டாடப்பெற்ற மாநகரசபைமுக்கள் சுகாதார விழாப் போட்டிகளில் நாவாந்துறை றோ. க. த. க. பாடசாலை:

**(1) பேச்சுப்போட்டியில்** **தாயின் சுகம்** என்னும் விஷயம் செல்வி சூ. யூலியற் என்பவரால் பேசப்பட்டு முதலாம்இடத்தைப் பெற்றது. **பட்டணப் பரிசுத்தம்** என்னும் விஷயம் செல்வன் அ. சத்தியசீலன் என்பவரால் பேசப்பட்டு மூன்றும் இடத்தைப் பெற்றது.

**(2) நடிப்புப்போட்டியில்** **மனித சத்துராதிகள்** (ஈ, நுளம்பு, தெள்ளு, மூட்டை, பேன்) மகாநாடு என்னும் விஷயசார்பாக ஆசிரியர் நீ. எஸ்தாக்கி அவர்களால் ஆக்கப்பெற்ற தேசியநாடகம் (நாட்டுக்கூத்து)மாநகரசபை மண்டபத்தில் போட்டியிடப்பட்டு முதலாம்இடத்தைப் பெற்றது.

விவசாய ரசாயன மருந்து வகைகளாலும்
கிருமி நாசினி மருந்துவகைகளாலும்
உங்கள் பயிர்களை அழிக்கும்
பூச்சி புழுக்கள்
மற்றும்
பயிர்களைப் பாதிக்கும்
புற்களையும்
அறவே ஒழித்து
உங்கள் கமத்தொழிலில்



அதிக லாபத்தைப் பெறுங்கள்!
இம் மருந்துகளைத் தெளிக்கக்கூடிய
சிறந்த
தெளிகருவிகள் (SPRAYERS)
எங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்
விபரங்கட்கு இன்றே எழுதுங்கள்
ஓட்டோஸ் லிமிட்டெட்,
தந்தி: "AUTOS" யாழ்ப்பாணம். டெலிபோன்: 496.
கிளை
தந்தி: "AUTOS" வவுனியா. டெலிபோன்: 577.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20 இலக்க, 5-ம் குறுக்குத்தெருவில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1964-ம் ஆண்டு ஆனிமாதம் 20-ந் திகதி சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org